## பிரதம மாவட்ட நீதிமன்றம், திருவள்ளூர்.

இந்நீதிமன்ற உதவியாளர் திரு. மோகன் அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு இந்திய சாட்சிய சட்டம் 1871, பிரிவு 1-ன் கீழ் மனுதாரர்/ எதிர்மனுதாரர் தரப்பு 1வது சாட்சியாக விசாரிக்கப்பட்டு 2023-ம் ஆண்டு ஜூலை திங்கள் 12 ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது.

பெயர்.................................................... தந்தை /கணவர் பெயர்..........................................

கிராமம்........................................................... இனம்.....................................................................

தாலுக்கா........................................................... மொழி.....................................................................

மாவட்டம்......................................................... தொழில்.................................................................

---

# G.W.O.P. No. 643/2021

# 12.07.2023

**ம.த.சா. 1 - திருமதி. சாந்தி, க/பெ. (லேட்) சுந்தரவதனம்**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

**<u>முதல் விசாரணை</u>**

நான் சென்னை ஆவடி பருத்திப்பட்டில் வசித்து வருகிறேன். நான் இந்த மனுவின் மனுதாரர். மனுதாரர் தரப்பு சாட்சி 1. என் தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. எங்களது குடும்ப அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) ம.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 03.08.2021 தேதியிட்ட சென்னை உயர்நீதிமன்றத்தின் H.C.P. No. 1124/2021 -ன் உத்தரவின் web copy ம.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. சுந்தரவதனத்தின் கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட இறப்பு சான்றிதழ் (எதிர்மனுதாரரின் வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன்) ம.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. சங்கீதா லட்சுமியின் கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட இறப்பு சான்றிதழ் ம.த.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. சுந்தரவதனத்தின் கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட வாரிசுரிமைச் சான்றிதழ் (எதிர்மனுதாரரின் வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன்) ம.த.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) ம.த.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. மைனர் எஸ்.வி. சச்சித்தாவின் ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) ம.த.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. மைனர் எஸ்.வி. ஜெயசரணின் ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) ம.த.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. மைனர் எஸ்.வி. சச்சித்தாவின் கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பிறப்பு சான்றிதழ் ம.த.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. மைனர் எஸ்.வி. ஜெயச்சரணின் கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பிறப்பு சான்றிதழ் ம.த.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. 17.11.2021 தேதியிட்ட திருவண்ணாமலை வருவாய் கோட்டாச்சியரின் உத்தரவு சார்வு நகல் ம.த.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12. மைனர் குழந்தைகள் சச்சிதா மற்றும் ஜெயச்சரணின் கல்விக்கட்டண ரசீதுகள்( வரிசை 10 ) ம.த.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுப்படி தீர்ப்பாக கேட்டுக் கொள்கிறேன்.**

**எதிர்மனுதாரர் வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- S.Selva Sundari
Principal District and Sessions Judge,
Tiruvallur.